(ஆடி 15) 2023 ஜூலை 31-ம் தேதி திங்கட்கிழமை

முற்பகல் 12:00 மணிக்கு

திருவாரூர் நகர்மன்ற சாதாரணக் கூட்டம் நடைபெறும் அச்சமயம்

கீழ்கண்ட பொருள்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்

முன்னிலை: திருமதி.செ.புவனப்பிரியா செந்தில், நகரமன்ற தலைவர்

| பொருள் எண் மற்றும் கூட்ட பொருள்கள் விபரம் | தீர்மான எண் |
|---|---|
| பொருள் எண் : 1<br>நகரமன்ற தலைவர் அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம்<br>நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட மேயர்கள், துணை மேயர்கள், மன்றத்தலைவர்கள், மன்றத் துணைத் தலைவர்கள் மற்றும் மன்ற உறுப்பினர்களுக்கு மாதந்தோறும் மதிப்பூதியம் வழங்கிட தமிழக அரசால் அரசாணை வெளியிடப்பட்டதற்கு திருவாரூர் நகர்மன்ற தலைவர், துணைத் தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் சார்பாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து தீர்மானமாக நிறைவேற்றிடுமாறு கேட்டுக்கொள்கிறேன். | 342)<br>தீர்மானிக்கப்பட்டது |
| பொருள் எண் : 2<br>நகரமன்ற துணைதலைவர் திருமதி.ச.அகிலா சந்திரசேகர் அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம்<br>மகளிர் உரிமைத்தொகை வழங்கிட ஆணை பிறப்பித்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து தீர்மானமாக நிறைவேற்றிடுமாறு கேட்டுக்கொள்கிறேன். | 343)<br>தீர்மானிக்கப்பட்டது |
| பொருள் எண் : 3<br>1-வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு.ச.கலியபெருமாள் அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம்<br>வார்டு எண்.1 - க்கு உட்பட்ட ஹவுஸிங் யூனிட் முதல் ராமநாதன் நகர் வரை மழைநீர் வடிகால் அமைத்திட கேட்டுக்கொள்கிறேன்.<br>குருஜி நகர் பி - சேனல் வாய்கால் - க்கு Retaining Wall அமைத்திட கேட்டுக்கொள்கிறேன். | 344)<br>தீர்மானிக்கப்பட்டது |
| பொருள் எண் : 4<br>2-வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திருமதி.க.மலர்விழி அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம்<br>ஈ.வீ.எஸ் நகரில் சிறுபாலம் அமைத்திட கேட்டுக்கொள்கிறேன். மேலும் வார்டு எண்.2 -க்கு உட்பட்ட பூங்காக்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி பூங்காக்களை மேம்படுத்திடுமாறு கேட்டுக்கொள்கிறேன். | 345)<br>தீர்மானிக்கப்பட்டது |
| பொருள் எண் : 5<br>3-வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திருமதி.ம.கஸ்தூரி அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம்<br>வடக்கு கொத்த தெருவில் உள்ள தைக்கால் மெயின் ரோடு, வடக்கு கொத்த தெரு, நடுதைக்கால் ரோடு மற்றும் கீழகொத்த தெரு ஆகிய இடங்களில் மழைநீர் வடிகால் அமைத்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.<br>தெற்கு கொத்த தெரு பொது கழிப்பிடம் அருகில் மற்றும் மேல கொத்த தெரு - தெற்கு கொத்த தெரு இணையும் இடத்தில் சிறுபாலம் அமைத்திடுமாறு கேட்டுக்கொள்கிறேன். | 346)<br>தீர்மானிக்கப்பட்டது |
| பொருள் எண் : 6<br>4-வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திருமதி.ஐ.பெனாசிர் ஜாஸ்மின் அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம்<br>4 - வது வார்டு நகர்மன்ற உறுப்பினராகிய என்னால் நகரமன்ற கூட்டத்தில் கொடுத்த மனுவின் பயனாக , நகரமன்ற உறுப்பினர் அனைவருக்கும் மதிப்பூதியம் | 347)<br>தீர்மானிக்கப்பட்டது |

| | |
|---|---|
| அளிக்க உத்திரவு பிறபித்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை நகரமன்ற கூட்டத்தில் இயற்றி தருமாறு கேட்டுக்கொள்கிறேன். எதிர்வரும் மழைக்காலத்தை முன்னிட்டு எனது வார்டு பகுதியில் உள்ள மழைநீர் வடிகால்கள் மற்றும் வாய்கால்களை தூர்வாரி தருமாறு கேட்டுக்கொள்கிறேன். | |
| பொருள் எண் : 7<br>6-வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திருமதி.பா.ஐஸ்வர்யா அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம்<br>ராமகே ரோடு கொடிக்கால் தெருவில் உள்ள மிகவும் பழுதடைந்து இடியும் நிலையில் உள்ள கழிப்பிடத்தை உடனே அகற்றிவிட்டு புதிதாக அமைத்து தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.<br>ராமகே தொடக்கப்பள்ளியில் மாணவர்களுக்கு அமர மேஜை , நாற்காலி வசதி செய்து தரும்படி கேட்டுக்கொள்கிறேன். | 348)<br>தீர்மானிக்கப்பட்டது |
| பொருள் எண் : 8<br>7-வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு.கோ.வரதராஜன் அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம்<br>புதிதாக கட்டப்பட்டுள்ள நூலகத்தின் வாசலில் தரை தளம் அமைத்திடுமாறு மற்றும் நூலகத்தின் வாயிலில் மேற்கூரை அமைத்திடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.<br>பாலாஜி நகர் அல்லது நல்லப்பா நகரில் நியாய விலை கடை அமைத்திடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.<br>மின்கம்பங்களுக்கு வரிசை எண் எழுதி முறைப்படுத்திடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.<br>புதிய குடிநீர் குழாய் இணைப்பால் மழைநீர் வடிகால் அடைப்பட்டு உள்ளதை சரி செய்ய கேட்டுக்கொள்கிறேன்.<br>குடிநீர் குழாய் உள்ள இடத்தில் தரை தளம் அமைத்து தர கேட்டுக்கொள்கிறேன். | 349)<br>தீர்மானிக்கப்பட்டது |
| பொருள் எண் : 9<br>12-வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு.சி.பிரகாஷ் அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம்<br>கீழசன்னதி தெருவில் உள்ள மழைநீர் வடிகால் பழுதடைந்து உள்ளதால் புதிய சிமெண்ட் கான்கிரீட் மழைநீர் வடிகால் அமைத்திட கேட்டுக்கொள்கிறேன். | 350)<br>தீர்மானிக்கப்பட்டது |
| பொருள் எண் : 10<br>13-வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திருமதி.சி.உமாமகேஸ்வரி அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம்<br>மானந்தியார் தெருவில் உள்ள நகராட்சி பொது கழிப்பிடத்திற்கு புதிய போர் அமைத்து தரவேண்டும்<br>தெற்கு கோபுர வாசலில் உள்ள நகராட்சி கழிப்பிடத்தை பக்தர்கள் வசதிக்காக நிரந்தர பயன்பாட்டுக்கு கொண்டுவரவேண்டும்.<br>மானந்தியார் தெரு தெற்கு வீதி இணைப்பு சாலை அருகில் உள்ள கல்வெட்டுகளை புதிதாக அமைத்துதரவேண்டும்.<br>வார்டில் உள்ள அனைத்து மழைநீர் வடிகால்களையும் தூர்வாரி தரவேண்டும்.<br>குமரகோவில் தெரு அண்ணாசதுக்கத்தின் இடதுபுறம் உள்ள மழைநீர் வடிகாலை சீரமைத்து தரவேண்டும்.<br>VST தெரு GRT வீடு அருகில் இருபுறமும் மற்றும் தெற்கு வீதி இணைப்பு சாலை அருகிலும் மற்றும் குமரகோவில் எதிரில் மற்றும் தமிழரசன் மருத்துவர் வீடு அருகிலும் வேகத்தடை அமைத்துதர வேண்டும். | 351)<br>தீர்மானிக்கப்பட்டது |
| பொருள் எண் : 11<br>16-வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு.சு.நா.அசோகன் அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம்<br>காட்டுக்கார தெரு காத்தாயியம்மன் கோவில் தெருவில் தார்சாலை அமைக்க வேண்டும்.<br>சபாபதி ஆற்றங்கரை தெரு மற்றும் முக்திவிநாயகர் தென்கரை ஆகிய | 352)<br>தீர்மானிக்கப்பட்டது |

| | |
|---|---|
| பகுதிகளில் மிகவும் பழுதடைந்துள்ள சிமெண்ட் சாலையினை புதுப்பித்துதர வேண்டும்.<br>முக்திவிநாயகர் தென்கரையில் மினிபவர் பம்பு அமைத்து தர வேண்டும். | |
| பொருள் எண் : 12<br>17-வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திருமதி.சி.சசிகலா அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம்<br>நெட்டிவேலக்கார தெருவில் DD Health Office எதிரில் பூங்காவும், மடப்புரம் பேட்டை - சிவப்பிராக மடத்தெரு சந்திப்பில் ஒரு வேகத்தடையும் அமைக்க தீர்மானம் நிரைவேற்றிதர கேட்டுக்கொள்கிறேன். | 353)<br>தீர்மானிக்கப்பட்டது |
| பொருள் எண் : 13<br>21-வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு.இரா.சங்கர் அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம்<br>ஷூ மேக்கர் காலனியில் மினி பவர் பம்ப் மற்றும் கழிவறை அமைத்திட கேட்டுக்கொள்கிறேன்.<br>செட்டியார் காலனியில் மழைநீர் வடிகால் அமைத்திட கேட்டுக்கொள்கிறேன்.<br>நெய்விளக்குதோப்பு மயானத்தில் மினி பவர் பம்ப் அமைத்திட கேட்டுக்கொள்கிறேன். | 354)<br>தீர்மானிக்கப்பட்டது |
| பொருள் எண் : 14<br>23-வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு.ச.கருணாநிதி அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம்<br>தாமரைக்குள தெரு மற்றும் ஆலடிமாரியம்மன் கோவில் தெருவில் கல்வெர்ட் அமைத்துதர வேண்டும்.<br>ஆலடி மாரியம்மன் கோவில் தெருவில் உள்ள சிறுபாலத்தின் அருகில் மண் அரிப்பு ஏற்பட்டுள்ளதால் ரிவிட்மெண்ட் சுவர் எழுப்பி தரவேண்டும்.<br>கொய்யாதோப்பு தெருவில் கிடாரம்கொண்டான் வாய்க்காலின் குறுக்கே சிறு பாலம் அமைத்து தரவேண்டும்.<br>கிடாரம்கொண்டான் மற்றும் சீனிவாசபுரம் சுடுகாடு மிகவும் மோசமான நிலையில் உள்ளது அதற்கு சுற்றுச்சுவர் மற்றும் தகனமேடை அமைத்து தரவேண்டும். | 355)<br>தீர்மானிக்கப்பட்டது |
| பொருள் எண் : 15<br>25-வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு.ஜெ.அய்யனார் அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம்<br>புள்ள தெரு கடைசியில் இருந்து சிவன் கோவில் தெரு வரை உள்ள இணைப்பு சாலையை அளவீடு செய்து இணைப்பு சாலையை சரிசெய்து தர வேண்டுகிறேன்.<br>குரு நகர் , குரு தெட்சிணாமூர்த்தி நகர் இரண்டிற்கும் சேர்த்து பொது உபயோகத்திற்காக மினி பவர் பம்ப் அமைத்து தர வேண்டுகிறேன். | 356)<br>தீர்மானிக்கப்பட்டது |
| பொருள் எண் : 16<br>26-வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திருமதி.க.பாரதி அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம்<br>திருவாரூர் பழைய பேருந்து நிலைய பகுதி, தைலம்மை தியேட்டர்,வாசன் ஹோட்டல், போன்ற பகுதிகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீர் பாசன வாய்க்கால் மூலமாக பெரியமில் தெரு வாய்க்கால்கள் சாக்கடையாக மாறி தேங்கி கிடக்கிறது. இதன் மூலம் கொசுக்கள் அதிக அளவில் உற்பத்தியாகி குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை பாதிக்கப்படுகிறார்கள். தேங்கி கிடக்கும் சாக்கடை நீரை வெளியேற்றவும், மேற்கண்ட கழிவுநீர் வெளியேற்றப்படும் நிறுவனங்களின் கழிவுநீரை பாதாள சாக்கடையின் மூலம் வெளியற்ற நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன். | 357)<br>தீர்மானிக்கப்பட்டது |
| பொருள் எண் : 17<br>27-வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு.சி.தினேஷ் குமார் அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம்<br>ஐ.பி கோவில் வடக்கு, தெற்கு, நடுத்தெருக்களில் புதிய தார்சாலை அமைத்துதர கேட்டுக்கொள்கிறேன். | 358)<br>தீர்மானிக்கப்பட்டது |

<table>
<tr><td>கே.டி.ஆர் எஸ்டேட்டில் பலவருடங்களாக இடம் ஒதுக்கப்பட்டு அமைக்கப்படாத பூங்காவினை அமைத்துதர கேட்டுக்கொள்கிறேன்.<br>முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக எதிர்வரும் பருவமழையினை எதிர்கொள்ளும் பொருட்டு தாழ்வான பகுதிகளில் மழைநீர் தேங்காமல் இருக்க கே.டி.ஆர்.எஸ்டேட் (செல்லாத்தாள் குளம்),ஐ.பி கோவில் நடுத்தெரு, தெற்கு தெரு வழி செல்லும் ஆத்தாக்குளம் வரையிலான கால்வாய்களை தூர்வாரி தண்ணீர் வாளவாய்க்கால் ஆற்றில் செல்வதற்கு வழிவகை செய்யவேண்டும்.</td><td></td></tr>
<tr><td>பொருள் எண் : 18<br><u>28-வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திருமதி.தி.கோமதி அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம்</u><br>பாரதியார் தெரு மற்றும் நார்சிங்கம்பேட்டை பைபாஸ் சந்திப்பில் மினி பவர் பம்ப் அமைத்திட கேட்டுக்கொள்கிறேன்.<br>வார்டு எண்.28 - க்கு உட்பட்ட பகுதிகளில் தெருவிளக்கு, சாலை அமைத்திட கேட்டுக்கொள்கிறேன்.<br>வார்டு எண்.28 - க்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள மழைநீர் வடிகால்களை தூர்வாரிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.</td><td>359)<br>தீர்மானிக்கப்பட்டது</td></tr>
<tr><td>பொருள் எண் : 19<br><u>29-வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு.எஸ்.அன்வர் உசேன் அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம்</u><br>மஜித்தோப்பில் உள்ள பொதுகழிப்பிடம் உள்ள மினி பவர் பம்ப் பழுதடைந்து போனதால் அந்தப் புது கழிப்பிடத்திற்கு புதிய மினி பவர் பம்பு அமைத்து தரவும்.<br>மஜித்தோப்பு மேட்டுப்பாளையம் பகுதியில் உள்ள மழை நீர் வடிகாலை மழைகாலத்துக்குள் தூர்வாரும் பணியை செய்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.</td><td>360)<br>தீர்மானிக்கப்பட்டது</td></tr>
<tr><td>பொருள் எண் : 20<br><u>30-வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு.சோ.புருஷோத்தமன் அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம்</u><br>கிடாரம்கொண்டான் நடுத்தெரு - மின்கம்பம் 1 புதியதாக அமைக்க வேண்டும்.<br>கிடாரம்கொண்டான் ரயிலடிதெரு - மின்கம்பம் 2 புதியதாக அமைக்க வேண்டும்.<br>கிடாரம்கொண்டான் தெற்கு தெரு - தெருவிளக்கு எரிய மின்கம்பி, மின்விளக்கு அமைத்துதர வேண்டும்.<br>கிடாரம்கொண்டான் பெரியார்தெரு - மின்கம்பம் 1 புதியதாக அமைக்க வேண்டும்.<br>கிடாரம்கொண்டான் பள்ளிகூடதெரு - தெருவிளக்கு எரிய மின்கம்பி, மின்விளக்கு அமைத்துதர வேண்டுதல்.</td><td>361)<br>தீர்மானிக்கப்பட்டது</td></tr>
<tr><td>பொருள் எண் : 21<br>15வது நிதிக்குழு மான்யம் 2023-24 (Untied Grant) இன் கீழ் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.16494/2023/ CFC-1 நாள்.23.06.2023ல் கீழ்கண்ட பணிகளை மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளதனை தொடர்ந்து நிர்வாக அனுமதி குறித்து மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>
<table>
<tr><th>வ. எண்</th><th>பணியின் பெயர்</th><th>மதிப்பீடு ரூ. இலட்சத்தில்</th></tr>
<tr><td>1.</td><td>வார்டு எண்.9 பாவாகோபாலசாமி தெரு (104009R025), வார்டு எண்.14 வன்மீகபுரம் தெரு (104014R020), வார்டு எண்.03 கீழகொத்த தெரு (104003R075) ஆகிய தார் சாலைகளை புதுப்பிக்கும் சாலை பணி.</td><td>33.00</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு</u> :-<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2. பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளி கோரியும் தொடர் நடவடிக்கையும் எடுக்கப்பட்டதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>362)<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | |
|---|---|
| ந.க.எண்.1730/2023/இ1 | |
| பொருள் எண் : 22<br>எதிர்வரும் வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 15 வரை உள்ள பகுதிகளில் இயற்கை இடர்பாடுகளினால் ஏற்படும் சேதங்களை எதிர்நோக்கும் வகையிலும் பொதுமக்களின் பொது சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு நலனை கருத்தில் கொண்டு திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 15 வரை பகுதிகளில் மழைநீர் வடிகால், கால்வாய்கள், பாலங்கள் மற்றும் சிறுபாலங்கள் தூர்வாரி தூய்மைப்படுத்துவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.10.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு :-<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. இயற்கை இடர்பாடுகளால் ஏற்படும் விளைவுகளை எதிர்நோக்கும் வகையில் மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளுவதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3. மேற்காணும் பணிக்குண்டான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.1487/2023/இ3 | 363)<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது |
| பொருள் எண் : 23<br>எதிர்வரும் வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.16 முதல் 30 வரை உள்ள பகுதிகளில் இயற்கை இடர்பாடுகளினால் ஏற்படும் சேதங்களை எதிர்நோக்கும் வகையிலும் பொதுமக்களின் பொது சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு நலனை கருத்தில் கொண்டு திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.16 முதல் 30 வரை பகுதிகளில் மழைநீர் வடிகால், கால்வாய்கள், பாலங்கள் மற்றும் சிறுபாலங்கள் தூர்வாரி தூய்மைப்படுத்துவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.10.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு :-<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. இயற்கை இடர்பாடுகளால் ஏற்படும் விளைவுகளை எதிர்நோக்கும் வகையில் மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளுவதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3. மேற்காணும் பணிக்குண்டான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.1487/2023/இ3 | 364)<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது |
| பொருள் எண் : 24<br>திருவாரூர் நகராட்சி எல்லைக்குட்ப்பட்ட பகுதிகளில் அரசாணை எண் 334 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (Election) நாள் 08.06.2016ல் தமிழ்நாடு நகர்புற உள் கட்டமைப்பு நிதி (TUFIDCO) சேவை நிறுவனத்தின் மூலம் வட்டியில்லாத கடன் பெற்று நகர எல்லைக்குள் பாதாள சாக்கடை இணைப்பு வழங்கப்படாமல் விடுப்பட்டுள்ள கட்டிடங்களுக்கு உள் இணைப்பு (Internal Plumbing) மூலம் பாதாள சாக்கடை இணைப்புகள் வழங்கிட அனுமதிக்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதி கடிதம் ந.க.எண். 30819/UGSS-1/2017/நாள் 08.02.2018 - ன் படி மேற்படி திட்டத்தின் மூலம் திருவாரூர் நகராட்சி எல்லைக்குட்ப்பட்ட பகுதிகளில் உள் இணைப்பு (Internal Plumbing) மூலம் பாதாள சாக்கடை இணைப்புகள் வழங்கிடும் பணிக்கு ரூ 368.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.<br>மேற்படி பணிக்கு வட்டியில்லாத கடன் வழங்கிட அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து தலைவர் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு நகர் புற உள் கட்டமைப்பு நிதி சேவை நிறுவனம் சென்னை அவர்களின் கடிதத்தின் வாயிலாக இந்நகர எல்லைக்குள் 5009 பாதாள சாக்கடை இணைப்புகள் (Internal Plumbing) மூலம் வழங்கிட ரூ 368,00 இலட்சம் வட்டியில்லா கடன் அனுமதிக்கப்பட்டது. அதன்படி தமிழ்நாடு நகர் | 365)<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது |

புற உள் கட்டமைப்பு நிதி சேவை நிறுவனம் (TUFIDCO) ரூ. 92.00 இலட்சம் மட்டும் விடுவிக்கப்பட்டுள்ளது. மேற்படி திட்டம் தொடங்கப்பட்ட பின்னர் இந்நகராட்சியில் 30.06.2023 வரை 3967 இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் ஒப்பந்ததாரரால் 1500 எண்ணிக்கையிலான இணைப்புகள் மட்டுமே வழங்கப்பட்டதால் அதற்குண்டான தொகை ரூ.94.06 இலட்சம் மட்டும் ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டது. மேலும் ரூ.94.06 இலட்சத்தில் கடன் தொகை ரூ.92.00 இலட்சம் போக மீதமுள்ள தொகை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது.

எனவே மேற்படி TUFIDCO - Revolving Fund 2018-19 ன் கீழ் வழங்கப்பட வேண்டிய மீதமுள்ள கடன் தொகை ரூ.276.00 இலட்சத்தினை ரத்து செய்திடவும் நகராட்சி மூலம் பாதாள சாக்கடை இணைப்பு வழங்கிடவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு :</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று இப்பணியினை மேற்கூறியவாறு ரத்து செய்ய நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு பரிந்துரைத்து தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 1653/2017/இ1

---

பொருள் எண் : 25

திருவாரூர் நகராட்சிக்கு புதிதாக UPS 3 KVA மற்றும் 65 AH SMF பேட்டரி (1 எண்ணிக்கை) சப்ளை செய்யும் பணிக்கு 12.06.2023 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட மூன்று நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.அதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | நிறுவனங்களின் விபரம் | வழங்கப்பட்ட விலைப்புள்ளிகளின் தொகை (ரூ) |
|---|---|---|
| 1. | Sri Krishna Battery Works , Thiruvarur | 16250 |
| 2. | HI - TEK Power Controls, Thiruvarur | 14500 |
| 3. | SCS Energy, Thiruvarur | 15500 |

மேற்காணும் பணியினை மேற்கொள்ள வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள "HI - TEK Power Controls, Thiruvarur" என்ற நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :-</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள HI - TEK Power Controls, Thiruvarur நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
3. நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதனை மன்றம் ஏற்கலாம்.

ந.க.எண்.1432/2023/இ3 - 1

366)
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

| | |
|---|---|
| **பொருள் எண் : 26**<br>நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட மேயர்கள், துணை மேயர்கள், மன்றத்தலைவர்கள், மன்றத் துணைத் தலைவர்கள் மற்றும் மன்ற உறுப்பினர்களுக்கு மாதந்தோறும் மதிப்பூதியம் வழங்குவது தொடர்பான அரசாணை(நிலை) எண்.98 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.13.07.2023 நகர்மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :-**<br>1. மன்றம் பதிவு செய்யலாம்.<br>**ந.க.எண்.0015/2022/இ3** | 367)<br>பதிவு<br>செய்யப்பட்டது |

**நாள் : 31.07.2023**
**இடம் : திருவாரூர்**

(ஓம்) செ.புவனப்பிரியா செந்தில்
**நகர்மன்ற தலைவர்**
**திருவாரூர் நகராட்சி**